**செய்தி வெளியீடு எண்: 334** **நாள்: 21.06.2013**

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி மாநில அளவிலான மாவட்ட வழங்கல் அலுவலர்களின் கலந்தாய்வு கூட்டம் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் 21.06.2013 அன்று காலை 10.00 மணியளவில் சென்னையில் நடைபெற்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே மிகச் சிறந்த முன்னோடி மாநிலமாக, முதன்மை மாநிலமாக மாற்றும் வகையில் 1 கோடியே 85 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு சுமார் 3 இலட்சத்து 16 ஆயிரம் மெ.டன் விலையில்லா அரிசி வழங்கி முழுமையான உணவு பாதுகாப்பு வழங்கி வருகிறார்கள். **வெளிச்சந்தையில் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த 1 கிலோ அரிசி 20 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தை 17.04.2013 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் தங்களது திருக்கரங்களால் துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் கீழ், தற்போது செயல்பட்டு வரும் 274 சிறப்பு அங்காடிகள் மூலம் இன்று வரை 18 ஆயிரத்து 175 குவிண்டால் அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதனால் வெளிச்சந்தையில் அரிசியின் விலை கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளது.** பொது மக்களின் தேவைக்கேற்ப கூடுதல் அங்காடிகளை திறக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்று உணவுத்துறை அமைச்சர் தெரிவித்தார். தமிழ்நாட்டின் பொது விநியோகத்திட்ட தேவைக்கென தற்போது அரசு கையிருப்பில் 8 இலட்சத்து 63 ஆயிரம் மெ.டன் அரிசியும், இந்திய உணவுக் கழக கிடங்குகளில் 6 இலட்சத்து 91 ஆயிரம் மெ.டன்னும் இருப்பு உள்ளதால், 5 மாத அரிசி தேவைக்கு போதுமானது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சிறப்பு பொது விநியோகத்திட்டத்தின் கீழ் மானிய விலையில் துவரம்பருப்பு, உளுத்தம் பருப்பு, செறிவூட்டப்பட்ட பாமாயில் ஆகியன நியாய விலைக் கடைகளில் தொடர்ந்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. **மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்ற கூட்டத்தொடரில் அறிவித்தபடி, காய்கறி விலை உயர்வினைக் கட்டுப்படுத்தும் தமிழ்நாடு அரசின் நடவடிக்கையாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 31 இடங்களில் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளை காணொலி காட்சி மூலம் 20.06.2013 அன்று தங்களது திருக்கரங்களால் துவக்கி வைத்தார்கள்.** பொது மக்களிடையே அமோக வரவேற்பு

**பெற்றுள்ள இத்திட்டம் சிறப்புடன் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் உணவுப் பொருள் வழங்கல் துறை உதவி ஆணையாளர்கள் அனைவரும் முனைப்புடன் கண்காணித்து வரவேண்டுமென அமைச்சர் கேட்டுக் கொண்டார்.**

01.01.2013 முதல் 2013 ஆம் ஆண்டிற்கு உள்தாள்கள் இணைத்து குடும்ப அட்டைகள் புதுப்பிக்கும் பணி காலக்கெடு ஏதும் நிர்ணயம் செய்யாமல், தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இது வரையில் 1 கோடியே 94 இலட்சம் குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து இது வரை 6 லட்சத்து 65 ஆயிரம் புதிய குடும்ப அட்டைகள் தமிழகமெங்கும் வழங்கப்பட்டுள்ளன. கடந்த மே மாதத்தில் மட்டும் 18 ஆயிரத்து 808 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.**

60 நாட்களுக்குள் புதிய குடும்ப அட்டை கோரும் மனுக்கள் தீர்வு செய்யப்பட வேண்டும் என்றும், மனுக்கள் தீர்வு செய்வதில் காலதாமதம் செய்வதை தவிர்க்குமாறும், முகவரி மாறுதல், குடும்ப உறுப்பினர்கள் பெயர்கள் சேர்த்தல் முதலான பணிகளுக்கென அலுவலகம் வரும் பொதுமக்களிடம் கனிவுடன் நடந்து, அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றித்தர அனைத்து வட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் உதவி ஆணையாளர்களுக்கு தக்க அறிவுரை வழங்கப்பட வேண்டுமென்று உணவுப் பொருள் வழங்கல் துறை அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

ஆய்வுக் கூட்டங்களில் ஏற்கனவே அறிவுறுத்தியபடி, பொது விநியோகத்திட்ட கிடங்குகள் மற்றும் நியாயவிலை அங்காடிகளின் செயல்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும், நியாயவிலை அங்காடிகளுக்கு தரமான பொருள்கள் மட்டுமே நகர்வு செய்யப்பட வேண்டும் தரம் குறைந்த பொருள்கள் பெறப்பட்டால் அவற்றை அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யாமல், கிடங்குகளுக்கே திரும்ப அனுப்பி, தரமான பொருள்கள் மட்டுமே பெற்று வழங்க வேண்டுமென்றும் மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார். இந்திய உணவுக் கழகத்திலிருந்து தரமான அரிசி நகர்வு செய்யப்படுவதை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

மாத இறுதியில் அதிக அளவில் அத்தியாவசியப் பொருள்கள் நியாயவிலைக் கடைகளுக்கு நகர்வு செய்யப்பட்டால் அது முறைகேட்டிற்கு வழிவகுக்கக்கூடும் என்பதால், நகர்வு அட்டவணைப்படி கிடங்குகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருள்கள் உரிய காலத்திற்குள் நகர்வு செய்யப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

அத்தியாவசியப் பொருள்களை பதுக்கி கடத்தும் சமூக விரோத சக்திகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை, வருவாய்த்துறை மற்றும் குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறையினர் அனைவரும் இரவு ரோந்து பணிகளை அதிகரித்து, வாகன சோதனைகளில் ஈடுபட்டு, கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட வேண்டுமென்று கூறிய அமைச்சர், இதுவரை **410 நபர்கள் கள்ளச்சந்தை தடுப்புக் காவல் சட்டத்ததின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையின் கீழ் இயங்கும் உணவுத்துறைக்கு **2013–14** நிதியாண்டிற்கு **4**ஆயிரத்து **900** கோடி ரூபாய் மானியமாக ஒதுக்கி பொது விநியோகத்திட்டத்தின் செயல்பாடுகள் சீரான முறையில் நடைபெறுவதை அனைத்து அலுவலர்களும் கண்காணித்து வர வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் முழு பயன்களும் உரியவர்களை சென்றடைவதை உறுதி செய்ய துறை அலுவலர்கள் அனைவரும் அர்ப்பணிப்பு மனப்பான்மையுடன் பணியாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் உணவுத்துறை செயலாளர், திருமதி.எம்.பி.நிர்மலா,இ.ஆ.ப., உணவுப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை கூடுதல் காவல் துறை தலைவர் திரு.கே.இராதாகிருஷ்ணண்,இ.கா.ப, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.பெ.சீதாராமன், இ.ஆ.ப, உணவுப்பொருள் வழங்கல் துறை இணை ஆணையர் திருமதி.பெ. ரமணசரஸ்வதி, மற்றும் உணவு மற்றும் கூட்டுறவுத்துறை சார்ந்த அலுவலர்கள், அனைத்து மாவட்ட வழங்கல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

-----

**வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**